14.06.2024

**DVC No. 83/2022 :**

**ம.சா.2. திரு.சிதம்பரம்**

**எதிர்மனுதாரர் ஆஜர்.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது உடன்பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 7 பேர்கள். என் உடன்பிறந்த சகோதரர் வைரவன் என்பவரின் மகள் தான் மனுதாரர் என்றால் சரிதான். நான் மனுதாரரை சுவீகாரம் எடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் தான் மனுதாரரை எனது மகளாக பாவித்து அவரை பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். மனுதாரர் பெங்களூரில் இருக்கிறாரா என்றால் அங்கு சகோதரர் வீட்டிற்கு சென்று வருவார். ஆனால் என்னுடன் தான் நிரந்தரமாக இருக்கிறார். மனுதாரர் என்ன வேலை பார்க்கிறார் என்றால் வேலை எதுவும் பார்க்கவில்லை. அவர் என்னுடன் தான் இருக்கிறார் என்பதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. மனுதாரர் நிரந்தரமாக பெங்களூரில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருடன் என்ன சமாதானம் பேசினேன் என்றால் சேர்ந்து வாழ்வதற்காக சமாதானம் பேசினேன். சென்னையில் உள்ள எதிர்மனுதாரர் வீட்டில் வைத்து தான் சமாதானம் பேசினேன். நான் எனது சகோதரர் லட்சுமணன், எனது மகன் ராமநாதன், லெட்சுமணனின் மகன் ராமநாதன் என்ற ஐயப்பன் ஆகியோர் சமாதானம் பேசினோம். 03.01.2021-ல் சமாதானம் பேசினோம். அந்த தேதியில் சமாதானம் பேசியதாக நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு சமாதானம் பேசிய காலத்தில் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது விவாகரத்து கேட்டு தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் சரியல்ல. நாங்கள் பேசிய பிறகு தான் எதிர்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்தார். 06.01.2021ல் எதிர்மனுதாரர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார்.நாங்கள் சமாதானம் பேசியபோது எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சொத்துக்களை மனுதாரர் பெயருக்கு எழுதிகொடுத்தால் தான் சேர்ந்துவாழ்வார் என நிபந்தனை விதித்தோம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் சொந்த ஊர் அரிமளம் ஆகும். அந்த ஊரில் செல்லப்பனுக்கு பூர்வீக வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் சாவி என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல. அது யாரிடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த வீட்டின் சாவியை 1ம் எதிர்மனுதாரரிடம் இருந்து நான் வலுக்கட்டாயமாக வாங்கி வைத்துக்கொண்டு தர மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்வதுபோல 03.01.2021ம் தேதி 1ம் எதிர்மனுதாரரின் வீட்டுக்கு நான் செல்லவில்லை என்றும் சமாதானம் பேசவில்லை என்றும் அவ்வாறு சமாதானம் பேசியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் தம்பி பெயர் நாச்சியப்பன். அவர் பெங்களூரில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். சாந்தியை அவரது சகோதரர் நாச்சியப்பன் பராமரிக்கிறாரா என்றால் பராமரிக்கிறார். நாச்சியப்பன் ஐ.டி. கம்பெனியில் மாதம் ரூபாய் 40ஆயிரம் முதல் 45 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கி வருகிறார். அவர் உடல் ஊனமுற்றவர். மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் தெரியாது. சென்னையில் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் தங்குவது உண்டு என்றால் சரிதான். அதனால் 1ம் எதிர்மனுதாரரின் சென்னையில் உள்ள வீட்டின் சாவி மனுதாரரிடம் உள்ளது என்றால் சரிதான். கடந்த 3 வருடங்களுக்கு மேலாக 1ம் எதிர்மனுதாரர் அந்த வீட்டில் தங்குவது இல்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் சொந்த ஊரில் உள்ள வீட்டின் சாவியையும் நான் வைத்துள்ளேன் என்றும் சென்னையில் உள்ள வீட்டிலும் அவரை தங்க விடுவதில்லை என்பதால் அவர் அவருக்கு தெரிந்த உறவினர்கள் வீட்டில் தான் தங்கி கஷ்டப்படுகிறார் என்றால் சரியல்ல. நானும் எனது சகோதரர்களும் எனது மகன்களும் மனுதாரருக்கு சாதகமாக இருந்துகொண்டு 1ம் எதிர்மனுதாரரை தொந்தரவு செய்து வருகிறோம் என்றும் 1ம் எதிர்மனுதாரர் ஒருபோதும் மனுதாரரை தொந்தரவு செய்ததில்லை என்றால் சரியல்ல. தாம்பரம் நீதிமன்றத்தில் நடந்துவரும் விவாகரத்து வழக்கிற்கு மனுதாரர் சென்றுவருகிறாரா என்றால் அங்கு வழக்கறிஞரை நியமித்து வழக்கு நடத்துகிறார். அந்த வழக்கை தேவகோட்டை சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்ய மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்துள்ளார். அந்த மனு எண் தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரர் சென்னையில் உள்ள 1ம் எதிர்மனுதாரர் வீட்டிலும், பெங்களூரில் தனியாக வேலை பார்த்து அங்கு தங்கி வருகிறார் என்றும் என்னுடன் ஒருபோதும் தங்கியது இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் மனுதாரர் என்னுடன் தங்கியிருந்தால் தாம்பரத்தில் நடந்துவரும் வழக்கு தேவகோட்டைக்கு மாற்ற உடனடியாக நடவடிக்கை எடுத்திருப்பார் என்றால் சரியல்ல. மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் என்ன பிரச்சனை ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது சகோதரர் சொல்லிதான் தெரியும். இருவருக்கும் என்ன பிரச்சனை என்று பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மனுதாரர் எனது தம்பி மகள் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மை விபரங்களை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.